**செய்தி வெளியீடு எண்: 78/2022** **நாள்: 14.08.2022**

**பத்திரிக்கைச் செய்தி**

**திருவொற்றுயூர் தேரடி மெட்ரோ இரயில் நிலையத்தில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாமில் 152 பேர் பங்கேற்ப்பு**

75-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், ரோட்டரி கிளப் ஆலந்தூர், சுகம் மருத்துவமனை மற்றும் யுனைட்டட் விங்ஸ் கிளப் உடன் இணைந்து மெட்ரோ பயணிகள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக இலவச பொது சுகாதார மருத்துவ முகாம் திருவொற்றுயூர் தேரடி மெட்ரோ இரயில் நிலையத்தில் நடைபெற்றது.

இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாம் திருவொற்றுயூர் தேரடி மெட்ரோ இரயில் நிலையத்தில் மாலை 3 மணி முதல் 8 மணி வரை நடைபெற்றது. மெட்ரோ பயணிகள், பொதுமக்கள் மற்றும் மெட்ரோ ஊழியர்கள் உட்பட சுமார் 152 நபர்கள் இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாமில் பயனடைந்தனர்.

இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாமில் பி.எம்.ஐ (உயரம் மற்றும் எடை), இரத்த அழுத்தம், ஈ.சி.ஜி, சீரற்ற இரத்த சர்க்கரை, உணவு ஆலோசனை மற்றும் பரிசோதனைகள் நடைபெற்றது.

இந்த இலவச மருத்துவ முகாம் சுகம் மருத்துவமனை மருத்துவர்கள் மதன் மற்றும் திவ்யா அகியோர் தலைமையிலான 7 பேர் கொண்ட குழுவினரால் நடத்தப்பட்டது. இம்முகாமில் பங்கேற்றவர்களுக்கு இலவச மருந்து, மாத்திரைகள் மற்றும் பரிசோதனைகள் செய்யப்பட்டது. தொடர் சிகிச்சை பெற உள்ளவர்கள் இம்மருத்துவமணையிலேயே முதல் முறையாக சிகிச்சை பெற்றால் 20 சதவீத சலுகை கட்டணம் பெறலாம். இந்த முகாம் வருகின்ற 16-ஆம் தேதி அன்று தியாகராயா கல்லூரி மெட்ரோவிலும், 20-ஆம் தேதி அன்று விம்கோ நகர் மெட்ரோ இரயில் நிலையத்திலும் மாலை 3 மணி முதல் 8 மணி வரை நடைபெறவுள்ளது. இந்த இலவச மருத்துவ முகாமை மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**